செ.வெ.எண் : 04/டிசம்பர் நாள் : 02.12.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## புரெவி புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து

## மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல்தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.

புரெவி புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்காக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இன்று (02.12.2020) வருகை தந்துள்ள மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல்தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மீட்பு நடவடிக்கைகளுக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள மீட்புக்குழுவினர் மற்றும் உபகரணங்களை பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, மண்டபம் மற்றும் தங்கச்சிமடம் பகுதிகளில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள தேசிய பேரிடர் மீட்புக்குழுவினரை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்.

மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய உத்தரவுகள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக சமீபத்தில் தமிழகத்தில் கரையை கடந்த நிவர் புயலால் பெரியளவில் பொருட்சேதமோ, உயிரிழப்புகளோ ஏற்படாமல் பாதுகாப்பாக எதிர்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம், தென்வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதாகவும், இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், தற்போது "புரெவி" புயலாக வலுப்பெற்றுள்ளதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இப்புயல் இலங்கையில் கரையை கடக்க தொடங்கி, தென் தமிழகத்தில் பாம்பன், கன்னியாகுமரி இடையே கரையை கடக்கும் என அறிவித்துள்ளது.

இதனையடுத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு, முன்னெச்சரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டுள்ள மாவட்டங்களில் சம்மந்தப்பட்ட மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் முகாமிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ஒருங்கிணைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதப்படுத்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 180 கடற்கரை கிராமங்கள் உள்ளன. அதேபோல, எளிதில் மழைநீர் தேங்கக்கூடிய 39 தாழ்வான பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் செல்ல வேண்டாமென முன்னறிவிப்பு வழங்கப்பட்டு மீனவர்களின் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைத்திட மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து துறை அலுவலர்கள் பங்களிப்பு செய்திடும் வகையில் துணை ஆட்சியர் நிலை அலுவலர் தலைமையில் 15 மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகளுக்காக 2 தேசிய பேரிடர் மீட்புக் குழுக்கள், 3 தமிழ்நாடு மாநில பேரிடர் மீட்புக் குழுக்கள், பேரிடர் சிறப்பு பயிற்சி பெற்ற தீயணைப்பு மீட்புக் குழுக்கள் என 350க்கும் மேற்பட்ட மீட்புக் குழு அலுவலர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். ஊரக அளவில் முதல்நிலை மீட்பு பணிகளுக்காக 3,500 நபர்கள் (First Responders) தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்திய கடலோர காவல்படை, INS பருந்து சார்ந்த வீரர்களும் மீட்புப் பணிகளுக்கு தயார் நிலையில் இருந்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடலோரம் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை மீட்டு பாதுகாப்பாக தங்க வைத்திட 23 பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் உட்பட 104 பள்ளி கட்டடங்கள், 20 கல்லூரிகள், 50 திருமண மண்டபங்கள், 12 சமுதாய நலக்கூடங்கள் என மொத்தம் 209 நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் பொதுமக்களுக்கு அத்தியாவசிய தேவையான பால், உணவுப் பொருட்கள், கழிப்பறை வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக இம்மையங்களில் தங்க வைக்கப்படும் பொதுமக்களுக்கு முகக் கவசம், சானிடைசர் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின் கீழ் 641 கண்மாய்களும், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் 1,122 கண்மாய்களும் உள்ளன. அவற்றில் 10 கண்மாய்கள் மட்டுமே முழு கொள்ளளவில் உள்ளன. நீர் நிலைகளை தொடர்ந்து கண்காணிக்கவும், அவசர சூழ்நிலையை எதிர்கொள்ள போதிய அளவு மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திடவும் அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மீட்பு பணிகளுக்காக 98 எண்ணிக்கையில் உயர் மின் அழுத்த மர அறுவை இயந்திரங்கள் (Power saws), 324 ஜே.சி.பி இயந்திரங்கள், 24 உயர் மின்அழுத்த தண்ணீர் உருஞ்சு பம்புகள், 16800 மணல் மூட்டைகள், 3563 மின்கம்பங்கள், 1020 சவுக்கு மரக்கட்டைகள் போன்றவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 1077 மற்றும் 04567-230060 ஆகிய தொடர்பு எண்களுடன் 24 மணிநேரமும் தொடர்ந்து செயல்படும் கட்டுப்பாட்டு அறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் பேரிடர் மேலாண்மை தொடர்பாக அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்கள் புயல் கன மழை நேரத்தில் வெளியே செல்லாமல் பாதுகாப்பாக வீட்டிலேயே இருக்க வேண்டும். வானிலை முன்னறிவிப்பு தொடர்பான அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டும் பின்பற்றி, அரசு மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளின்போது, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எம்.மணிகண்டன் அவர்கள் (இராமநாதபுரம்), திரு.என்.சதன்பிரபாகர் அவர்கள் (பரமக்குடி), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., அவர்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.எம்.ஏ.முனியசாமி அவர்கள், கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.மா.பிரதீப்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆ.சிவகாமி உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**